JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-8 Witness
for Prosecution

| CC.No. | 46/2025 | Crime No. | 14/2025 | Station | Appakodal |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw-8- G.K.சந்திரசேகரன்** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 25th day of February 2026 | | | |

**1 ம் எதிரி ஆஜர், 2ம் எதிரி ஆஜர் இல்லை.**

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து, கடந்த 30.06.2025 ஆம் தேதியன்று, பணி ஓய்வு பெற்ற தற்போது கோபிசெட்டிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 14.01.2025ஆம் தேதியன்று, நான் ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது அன்றைய தினம் ஆப்பக்கூடல் காவல் நிலைய ஆய்வாளர் வில்சன் சகாயராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மற்றும் TN 36 AY 4394 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனம் மற்றும் முன்பக்கம் இரண்டு இடத்தில் கிழிந்த நிலையில் நான்கு போலீஸ் பட்டனுடன் கூடிய போலீஸ் யூனிபார்ம் சட்டை ஒன்று ஆகியவற்றையும் ஆஜர்படுத்தியதை பெற்று 14.012025 ஆம் தேதி 20.30 மணிக்கு, ஆப்பக்கூடல் காவல் நிலைய குற்ற எண்.14/ 2025, சட்டப்பிரிவுகள் 2296(b), 132, 121(1), 351(3) BNS பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

வாதி வில்சன் சகாயராஜ் என்பவர் ஆஜர்படுத்திய வழக்கு சொத்தினை படிவம் 91 இல் கைப்பற்றினேன். **படிவம் 91 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசலுடன் வாதியின் எழுத்து மூலமான புகார் மற்றும் படிவம் 91 ஆகியவற்றினை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1 பவானி அவர்களுக்கு அனுப்பி வைத்தும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நான் 14.01.2025 ஆம் தேதி 21–30 மணிக்கு சம்பவயிடம் சென்று

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.02.25 06:56:04 +0530

சாட்சிகள் ருத்ரர், முத்துராஜா மற்றும் வெங்கடசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தினை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் 22.00 மணிக்கு எதிரிகள் குற்றச்செயலுக்கு பயன்படுத்திய கைக்கு அடக்கமான இரண்டு கற்களை கைப்பற்றி கைப்பற்றுதல் தயார் செய்தேன்.

பின்னர் சாட்சிகள் வில்சன் சகாயராஜ், நாகராஜன், ஈஸ்வரன், நவீன் குமார், மாதையன், முத்துராஜா மற்றும் வெங்கடசாமி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் .பின்னர் வழக்கின் சம்பவயிடத்தினை பார்வையிட்டதிலிருந்தும், சாட்சிகளை விசாரித்ததிலிருந்தும் வழக்கின் சம்பவம் உண்மையான தெரியவந்த நிலையில் எதிரியை தேடி வந்த நிலையில் 14.01.2025 ஆம் தேதி 23.30 மணிக்கு, அத்தாணி கைகாட்டி பஸ் நிறுத்தம் அருகில் நின்றிருந்த எதிரி குப்புசாமி என்பவரை கைது செய்வதற்கான காரணத்தை கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து அவர் குடிபோதையில் இருந்ததால் குடி போதை சான்று பெற பவானி அரசு மருத்துவமனைக்கு மருத்துவ நமுனா மூலம் அனுப்பி மருத்துவ சான்று பெற்றேன். **குப்புசாமி என்பவரின் குடி போதை மருத்துவ சான்றிதழ் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட 2ம் எதிரி பற்றிய ரகசிய தகவலின் பெயரில் 15.01.2025 ஆம் தேதி 05.30 மணிக்கு குப்பாண்டபாளையம் தபால் அலுவலகம் அருகில் இருந்த எதிரி குமார் என்பவரை கைது செய்து, அவர் குடிபோதையில் இருந்ததால் குடிபோதை சான்று பெற பவானி அரசு மருத்துவமனைக்கு மருத்துவமனை மூலம் அனுப்பி வைத்து குடி போதை சான்றிதழ் பெற்று தாக்கல் செய்தேன். **குமார் என்பவரின் குடிபோதை சான்றிதழ் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் எதிரிகள் குப்புசாமி மற்றும் குமார் ஆகியோர்களையும், கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களையும்கைபட்டுதல் மகத்துடன் தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 30.01.2025 ஆம் தேதி சாட்சி நாகராஜன் என்பவருக்கு சிகிச்சை அளித்த பவானி அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் பூர்ண சந்திரிகா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுன் கூடிய காயைச்சான்றிதழ் பெற்று தாக்கல் செய்தேன். பின்னர் அன்றைய தினமே எதிரிகள் குப்புசாமி மற்றும் குமார் ஆகியோர்கள் குடிபோதையில் மேற்கண்ட வாகனத்தை தாறுமாறாக ஓட்டி வந்து பொதுமக்களுக்கும் போக்குவரத்து இடையூறு ஏற்படுத்திய குற்றத்திற்காக வழக்கின் சட்ட பிரிவை 296(b), 132, 121(1), 351(3) BNS இருந்து 296(b), 132, 121(1), 351(3) BNS மற்றும் 185 MV Act ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்திற்கு படிவம் 91 தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். கைக்கு அடக்கமான இரண்டு கற்களுக்கான படிவம் 91 அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. **TN 36 AY 4394 என்ற பதிவு**

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.25 06:56:12 +0530

**எண் கொண்ட ஹோண்டா சைன் இருசக்கர வாகனத்தின் புகைப்படங்கள் (4 எண்ணிக்கை) அ.சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இத்துடன் எனது புலன்விசாரணையை முடித்து 30.01.2025 ம் தேதியன்று எதிரிகள் குப்புசாமி மற்றும் குமார் ஆகியோர்கள் மீது சட்ட பிரிவுகள்296(b), 132, 121(1), 351(3) BNS மற்றும் 185 MV Act பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் இருவரையும் கடந்த 15.01.2025–ம் தேதியன்று, காலை 6 மணிக்குள், நீதிமன்ற காவலுக்கு அனுப்பி விட்டேன் என்றால், சரிதான். எனது விசாரணையில் இந்த வழக்கின் புகார்தாரர் 1ம் எதிரி குடிபோதையில் சம்பவயிடத்திற்கு வந்ததாகவும், அப்போது நாகராஜன் என்பவருடன் வாக்குவாதம் ஏற்பட்டு நாகராஜ் என்பவரை 1ம் எதிரி அடித்ததாகவும், அதன் பின்னிட்டு தான் 2ம் எதிரி சம்பவயிடத்திற்கு வந்தார் என்றால், சரிதான். ஒரே வண்டியில் 1 மற்றும் 2ம் எதிரிகள் வரவில்லை என்றால், சரிதான்.

புகார்தாரர், புகார் கொடுக்கும்போது எதிரி குடிபோதையில் இருந்தார் என்பதற்கு இரசீது எதுவும் புகாருடன் இணைத்து கொடுக்கவில்லை என்றால், சரிதான். எதிரிகள் மீது குடிபோதையில் வந்தார்கள் என புகார் ஒரு வணக்கம் நான் தனி ஒருவழக்கும் தாக்கல் செய்தேன் என்றால், சரியல்ல. நான் மட்டும் தான் வழக்கு பதிவு செய்தேன். குடிபோதை சான்று வழங்கிய மருத்துவர் விசாரித்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால், சரிதான். மருத்துவர் கொடுத்த அறிக்கையில் Consumed Liquor But is Not Under Its Influence என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால். சரிதான். கைக்கு அடக்கமான கல் எந்த கல் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால். சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமானது மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால். சரிதான். சம்பவயிடத்திற்கு அருகில் நிறைய கடைகள் உள்ளது என்றால், சரிதான்.

நான் தனிநபர் சாட்சிகள் சம்பவத்தை பார்த்ததாகவோ, அவர்களை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால், சரிதான். எதிரியிடமிருந்து எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றால், சரிதான். வழக்கு பதிவு செய்யப்பட்ட நாள் பொங்கல் என்றால், சரிதான். பொதுவாக தை 1 பொங்கல் தினத்தன்று மதுபான கடை மூடி தான் இருக்கும் என்றால், சரிதான். இந்த வழக்கில் உள்ள 3 காவல் அதிகாரிகளையும் நான் எங்கு வைத்து விசாரித்தேன் என்றால், சம்பவயிடத்தில் வைத்து விசாரித்தேன் .15.01.2025 தேதிக்கு முன்பே 14.01.2025 தேதியன்று, அனைவரையும் விசாரித்து முடித்து விட்டேன் என்றால், சரிதான்.

நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் புகார் எதுவும் பெறப்படவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும், ஆவணங்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றாலும், சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.25 06:56:19 +0530

வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றாலும், சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல. நான் முறையாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எதிரிகளை வெளியே விட்டால் எங்கள் மீது புகார் கொடுத்து விடுவார்கள் என்பதற்காக அவர்கள் மீது பொய் புகார் கொடுத்து அந்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.25 06:56:30 +0530

Sd/– (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani